குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திரு.சதாம்உசைன், B.A.,L.L.B.,
(மு.கூ.பொ) குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.288/2022

அ.சா.1

2026–ம் ஆண்டு ஜுலை 07–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 1–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தனம் | தொழில் | |
| கணவர் பெயர் | சேகர் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.15 மணி,

Accused A1)Muthusamy, A2)Kumar present. Advocate Mr.Siddharthasankar present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் பொத்தியாம்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். எங்கள் ஊர் ஏரிக்கோடியில் உள்ளது. வீட்டிற்கு பின்பு உள்ள ஏரியில் தண்ணீர் அதிகமாக இருந்ததால் தண்ணீர் நிரம்பி எங்கள் வீட்டிற்கு வந்து விடும் என்று முன்னெச்சரிக்கையாக ஒரு மாதத்திற்கு முன்பாக மண்ணை கொட்டி அடைத்து வைத்திருந்தோம். கடந்த 05.01.2022 ஆம் தேதி காலை சுமார் 08.45 மணியளவில் ஆஜர் எதிரிகள் ஜே.சி.பி கொண்டு வந்து மண்ணை நிரவி கொண்டிருந்தார்கள். ஏன் மண்ணை நிரவுகிறீர்கள் என்று கேட்டபோது எங்களுக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

2. சத்தம் கேட்டு பொதுமக்கள் கூட்டமாக கூடிவிட்டார்கள். கூட்டத்தில் ஏற்பட்ட தள்ளுமுள்ளில் நான் கீழே விழுந்து எனக்கு நெஞ்சில் காயம் ஏற்பட்டது. நான் சேலம் அரசு மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்றேன். அப்போது போலிசார் அங்கு வந்து என்னிடம் கையெழுத்து பெற்றார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது. ( **அந்த கையெழுத்து அ.சா.ஆ.1**

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.07 17:41:23 +0530

**ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது.

3. நான் தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டேன். எதிரிகள் தாக்கல் செய்துள்ள சமாதான மனுவில் உள்ள 1வது கையெழுத்து செய்துள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது. ( **அந்த கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) போலிசார் விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

4. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 05.01.2022 ஆம் தேதி 08.45 மணியளவில் பொத்தியாம்பட்டி காட்டுவளவு ஏரிக்கோடியில் உள்ள என் வீட்டிற்கு பின்புறம் உள்ள புறம்போக்கு நிலத்தில் ஆஜர் எதிரிகள் இருவரும் என்னையும், சாட்சி 3 தர்ஷினி என்பவரையும் கெட்ட வார்த்தையால் திட்டினார்கள் என்றும், 1 ஆம் எதிரி கையால் என் நெஞ்சின் மீது அடித்தார் என்றும், 2 ஆம் எதிரி என்னை கீழே தள்ளி காலால் என் வலது இடுப்பில் உதைத்தார் என்றும், அதைத்தடுக்க வந்த சாட்சி தர்ஷினி என்பவரை 1 ஆம் எதிரி வலது பக்க இடுப்பில் காலால் எட்டி உதைத்தார் என்றும், சாட்சி சேகர் என்பவரை இரண்டாம் எதிரி கீழே தள்ளி காலால் முதுகு, கழுத்து பகுதியில் எட்டி உதைத்தார் என்றும், 1 மற்றும் 2 ஆம் எதிரிகள் சேர்ந்து சாட்சி ரத்தினம்மாள் என்பவரை கையால் அவரது முதுகில் குத்தினார்கள் என்றும், 1 ஆம் எதிரி சாட்சி சேகர் என்பவரை வலது கை மணிக்கட்டில் பல்லால் கடித்தார் என்றும் கூறி புகார் வாக்குமூலம் அளித்துவிட்டு, தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டபடியால் புகார் வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை மறுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 12.23 மணி.**

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.07 17:41:27 +0530